4. கவன ஈர்ப்பு

தருமபுரி மாவட்டம், அரூர், மருதிப்பட்டி அருகே சௌனக்கல் பாசனக் கால்வாய் திட்டப் பணிகளைத் துவக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர், மருதிப்பட்டி அருகே சௌனக்கல் பாசனக் கால்வாய் திட்டப் பணிகளைத் துவக்க வேண்டியதன் அவசியம்" குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அறிக்கை

1. தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டம்பட்டி கிராமத்தின் அருகே தென்பெண்ணையாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி சௌனக்கல் பாசனக் கால்வாய் (மதிகெட்டான் கால்வாய் பாசனத் திட்டம்) மூலம் அருகில் உள்ள ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ரூ.475.00 இலட்சத்திற்கு 1991-1992 ஆம் ஆண்டு விலை விகிதத்தில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

2. இத்திட்டத்திற்கு 18.36 ஏக்கர் பட்டா நிலங்களும், 46.89 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலங்களும் கையகப்படுத்த வேண்டும்.

3. இத்திட்டத்தின் பயன் செலவு விகிதம் 0.12:1 என்ற விகிதத்தில் மிகவும் குறைவாக உள்ளதால், பொருளாதார ரீதியாக சாத்தியமில்லை என்பதால் இத்திட்டம் 1993-ல் கைவிடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அரூர் பகுதி, மருதிப்பட்டி, செனக்கல் பாசனக் கால்வாய் திட்டம் 1982-1983 ஆம் ஆண்டுகளில் சர்வே செய்யப்பட்டது. விளாம்பட்டி, மருதிப்பட்டி, கீழ்மொரப்பூர், வேட்டப்பட்டி, மாம்பட்டி, மத்தியம்பட்டி, வடுகப்பட்டி, தொட்டம்பட்டி ஆகிய 8 பஞ்சாயத்துகளின் 32 ஏரிகள், நீர் உள்வாங்கக்கூடிய 320 கிணறுகள், சுமார் 15,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் அளவிற்கு 14 கி.மீ. தூரம் கொண்டது செனக்கல் பாசனக் கால்வாய் திட்டம். இந்தத் திட்டம் இரண்டாவது கட்டமாக 1991-1992-ல் மறுமதிப்பீடு செய்யப்பட்டது. சுமார் ரூபாய் 475 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. 132 ஏக்கர் நஞ்சை நிலம், 468 ஏக்கர் புஞ்சை நிலம் என, ஆக மொத்தம் 600 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, கேள்வியைக் கேளுங்கள். விரிவாகப் பேச வேண்டாம்.*

திரு. ப. டில்லி பாபு: *இதற்காக 18.36 ஏக்கர் பட்டா நிலங்களும், 46.89 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலங்களும் கையகப்படுத்த வேண்டும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் போதியளவு பணம் இல்லை என்று இத்திட்டம் அன்றைக்குக் கைவிடப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதில், "கூடுதலான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால்தான் திட்டம் கைவிடப்பட்டது" என்பது அதில் உள்ளடங்கியிருக்கிறது. ஆகவே, "இந்தத் திட்டத்திற்காகக் கூடுதல் மதிப்பீடு செய்ய வேண்டும்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பணிவோடு நான் கோருகிறேன். அவ்வாறு செய்தால், அங்கிருக்கும் ஏறக்குறைய 32 ஏரிகளில் நீர்வரத்து இருக்கும்; 10,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்; கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற தருமபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் வயிற்றிலே பாலை வார்த்தது போன்று இருக்கும்.*

[2014 ஆகஸ்ட் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, உரையை முடியுங்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *இதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலாவது அந்தப் பகுதியில் செனக்கல் பாசனக் கால்வாய்த் திட்டத்தைக் கொண்டு வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே இதே அவையில் மதிகெட்டான் கால்வாய் திட்டம் என்று பெயர் மாற்றி அறிவிக்கப்பட்டது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள், "போதிய நிதி ஆதாரம் இல்லை என்ற காரணத்தால், இந்தத் திட்டம் 1991-1992 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டது" என்ற தவறான தகவலை இங்கே பதிய வைத்துக்கொண்டிருக்கிறார். அது உண்மையான காரணம் அல்ல. இத்திட்டத்தின் பயன், செலவு விகிதம் 0.12:1 என்ற விகிதத்தில் மிகவும் குறைவாக உள்ளதாலும், பொருளாதார ரீதியாக சாத்தியமில்லாத காரணத்தினாலும்தான் இத்திட்டம் அப்பொழுது கைவிடப்பட்டது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிகெட்டான் கால்வாயானது செனக்கல் பாசனக் கால்வாய்த் திட்டம். பெண்ணையாற்றின் வலதுபுறப் பகுதியிலுள்ள ஏரிகளுக்கு நீர் வழங்க சுதந்திர காலத்திற்கு முன்பே அமைக்கப்பட்ட கால்வாய் என அறியப்படுகிறது. இக்கால்வாய் பின்னர் காலப்போக்கில் தூர்ந்துவிட்டது. இக்கால்வாய்மூலம் பயன்பெற்ற ஏரிகளுக்கு பெண்ணையாற்று நீரைக் கொண்டு வருவதற்கு ஆய்வு செய்தபோது ஏற்கெனவே உள்ள மதிகெட்டான் கால்வாய் தூர்ந்து, அதன் சுவடு ஏதும் தெளிவாகத் தெரியாததாலும், மேலும் இக்கால்வாய்மூலம் மேற்படி ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்ல ஆற்றின் மட்ட அளவுகள் ஏற்புடையதாக இல்லை என்பதாலும், பெண்ணையாற்றின் மேல்புறத்தில் தொட்டம்பட்டி கிராமத்தின் அருகே புதிதாக ஓர் அணைக்கட்டு அமைத்து, அதிலிருந்து 15.25 கி.மீ. தூரத்திற்குப் புதிய கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கால்வாய்மூலம்

2014 ஆகஸ்ட் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மொத்தம் 600 ஏக்கர் நிலங்கள் மற்றும் குளங்கள் பாசனம் பெற வழிவகை செய்ய ஆய்வு செய்யப்பட்டது. இக்கால்வாய் பெண்ணையாற்றின் அருகே வலதுகரை ஓரம் அமைந்துள்ள வன நிலங்கள் வழியாகச் செல்ல வேண்டியிருந்ததால், இத்திட்டத்திற்கு 46.89 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலங்களும், 18.36 ஏக்கர் பட்டா நிலங்களும் கையகப்படுத்த வேண்டியுள்ளது.

பிற்பகல் 12-15

இத்திட்டத்திற்கான பயன் சதவிகிதம் 0.12:1 என்கிற விகிதத்தில் மிகக் குறைவாக இருந்தது. இதனால், இத்திட்டம் பொருளாதார ரீதியாக சாத்தியம் இல்லையென்பதால், அப்பொழுது கைவிடப்பட்டது. தற்போது இத்திட்டத்தைச் செயல்படுத்த சுமார் 50 கோடி ரூபாய் செலவாகும் என்பதாலும், ஆயக்கட்டு 600 ஏக்கர் மட்டுமே பயன் பெறும் என்பதாலும், இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 46.89 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலத்தைக் கையகப்படுத்துவது மிகக் கடினம் என்பதாலும், இத்திட்டம் சாத்தியமற்றதாகவே உள்ளது. இருப்பினும், இத்திட்டத்தினால் பயன் பெறும் பகுதிகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருப்பதால், ஏற்கெனவே உள்ள மதிகெட்டான் கால்வாயின் சுவடுகளைக் கண்டறிந்து, அவற்றைத் தூர் வாரி, தென்பெண்ணையாற்று நீரை ஈச்சம்பட்டி அணைக்கட்டிற்குக் கீழ்புறத்தில் ஒரு அணை கட்டி, வன நிலங்களைத் தவிர்த்து, இப்பகுதிகளுக்கு நீர் வழங்க சாத்தியகூறுகள் இருக்கின்றனவா என அறிய, மறு ஆய்வுப் பணிகள் தொடங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினைப் பெற்று, பணிகள் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) அனுமதியில்லை. (குறுக்கீடு) அது ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) அது ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) தினம், ஒரு கவன ஈர்ப்பு எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) அனுமதியில்லை, தினம் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது*